# திருமங்கலம் சி.எஸ்.ஐ. நல்லமேய்ப்பர் ஆலயத்தில் பாடகர் குழுவினரின் சிறப்பு கிறிஸ்துமஸ் கீத ஆராதனை விழா



**திருமங்கலம், டிச. 23-**

கிறிஸ்துமஸ் பண்டிகை வருவதை முன்னிட்டு மதுரை மாவட்டம், திருமங்கலம் நகர் சி.எஸ்.ஐ நல்ல மேய்ப்பர் ஆலயபாடகர் குழுவின் சார்பில் இன்னிசை கருவிகள் முழங்கிட கிறிஸ்துமஸ் கீத ஆராதனை விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

கிறிஸ்துமஸ் பண்டிகை வரும் 25-ம் தேதியன்று உலகமெங்கிலும் உள்ளகிறிஸ்தவர்களால் உற்சாகத்துடன் கொண்டாடப் படுகிறது.

இந்நிலையில் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை உலகிற்கு அறிவித்திடும் வகையில் கிறிஸ்துமஸ் கீத பவனி, கீத ஆராதனை,கிறிஸ்துமஸ் மரவிழா கிறிஸ்துமஸ் விளையாட்டு விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் அனைத்து கிறிஸ்தவ திருச்சபை களிலும் தற்போது நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக மதுரை - இராமநாதபுரம் திருமண்டலம், திருமங்கலம் தெற்கு குருசேகரம் சி.எஸ்.ஐ நல்ல மேய்ப்பர் ஆலயத்தில் சபைகுரு அருள்திரு டி.சாம் பிரபு தலைமையில் திருச்சபைபாடகர் குழுவினரின் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை விழா சிறப்பாக நடைபெற்றது.சபைமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த கீத ஆராதனை விழாவில் சகோ.இம்மானுவேல் பீட்டர் இன்பராஜ் சிறப்பு தேவ செய்தியளித்தார்.

இதனை தொடர்ந்து திருச்சபையின் பாடகர் குழுவைச் சேர்ந்த வாலிபர்களும், வாலிப பெண்களும் கொயர் மாஸ்டர் தியாபிலஸ் ஜெயகுட்டி மற்றும் கொயர் ஒருங்கிணைப்பாளர் தியோடர்சன் எபிதேவவரம் ஆகியோரின் இசை வழிகாட்டுதல்களில் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை இன்னிசையுடன் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி பாடல்களை பாடினார்கள்.இதனை தொடர்ந்து ஆலயவளாகத்தில் சபையார் பங்குபெற்ற கிறிஸ்துமஸ் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது.

இதில் சிறியவர் முதல் பெரியவர்கள் வரை ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். நிகழ்வுகளில் கலந்து கொண்ட சபைமக்கள் அனைவருக்கும் ஐக்கியஉணவு வழங்கப்பட்டது. நிகழ்வின் நிறைவில்சபைகுரு அருள்திரு டி.சாம்பிரபு, போதகரம்மா சுகந்தராணி சாம்பிரபு ஜெபித்து அருளாசி வழங்கினர். இதற்கான ஏற்பாடுகளை ஆலய கமிட்டி செயலாளர் தேவதாசன், பொருளாளர் தியோடர்சன் எபி தேவவரம் மற்றும் உறுப்பினர்கள் சிறப்புடன் செய்திருந்தனர்.

# மவுண்டன் வேர்ல்ட் சி.பி.எஸ்.இ பள்ளியில் அறிவியல் கண்காட்சி



**பரமக்குடி, டிச. 23-**

பரமக்குடி அருகே உள்ள கமுதக்குடி மவுண்டன் வேர்ல்ட் சி.பி.எஸ்.இ பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. பள்ளியின் கல்விக் குழு தலைவர் முருகானந்தம் தலைமை வகித்தார். பள்ளியின் தலைவர் பூமிநாதன், செயலாளர் நாகரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் முதல்வர் அருள் ஜெகன் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக தனியார் பள்ளிகளின் மாவட்ட கல்வி அலுவலர் ஜெயந்தி, மேலூர் அரசு கலைக்கல்லூரி இயற்பியல் துறை இணைப் பேராசிரியர் ஜெசிந்தா ராணி ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டு சிறந்த படைப்புக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

புதுமையின் விண்மீன் என்ற தலைப்பில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் மாணவர்கள் ஆர்கானிக் மை, மாணவர்களுக்கான செயற்கை நுண்ணறிவு கருவி, பார்வையற்றோருக்கான ஸ்மார்ட் கண்ணாடி, ஹைட்ராலிக் பாலம்,நீர் மட்டக் குறியீடு, ஸ்மார்ட் சிட்டி, சாக்லேட் வெண்டிங் மெஷின், வாயு கசிவு எச்சரிக்கை கருவி,சூரிய குடும்பத்தின் செயல்முறை மாதிரி போன்ற பல புதுமையான அறிவியல் திட்டங்களை காட்சிப்படுத்தினர்.இந்நிகழ்ச்சியில் கல்விக்குழு இயக்குனர்கள்,ஏ.வி.மெட்ரிக் பள்ளி செயலாளர் ராஜேஷ் கண்ணன்.இணை செயலாளர் கே.டி.ஆர். பிரசன்னா,ராசிபிரசன்னா,ஆயிர வைசிய கல்வியியல் கல்லூரி இணை செயலாளர் சுதர்சன் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.பொருளாளர் மணிவண்ணன் நன்றி கூறினார்.

# மேலூரில் இருசக்கர வாகன பழுது பார்ப்போர் சங்கத்தின் சார்பில் விழிப்புணர்வு ஊர்வலம்



**மேலூர், டிச. 23-**

மேலூர் நண்பர்கள் இரண்டு சக்கர வாகனம் பழுது பார்ப்போர் நலச்சங்கம் சார்பாகவும், தமிழ்நாடு இருசக்கர வாகன பழுது நீக்குவோர் தலைமை நலச்சங்கம் சார்பாகவும், மேலூர் காவல்துறை சார்பாகவும், தலைக்கவசம் விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் உறுப்பினர்கள் 9-ம் ஆண்டு துவக்க விழா 21-ந்தேதி நாவினிபட்டி ராஜலெட்சுமி மஹாலில் நடைபெற்றது. விழாவில் இருசக்கர வாகன பழுதுநீக்குவோருக்கு பி.எஸ்-6 பயிற்சி அளிக்கப்பட்டது. சங்கத்தின் சான்று மற்றும் போஸ்ட் ஆபீஸ் விபத்து காப்பீடு முகாம் நடைபெற்றது. சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மேலூர் காவல் ஆய்வாளர் சிவசக்தி தொடங்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு இருசக்கர வாகன பழுது நீக்குவோர் தலைமை நலச்சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.செல்வம், மாநில பொதுச் செயலாளர் எஸ்.குமாரவேலு, மாநில இணைச் செயலாளர் ராஜா, மற்றும் கிளை சங்க நிர்வாகிகள், அருள் ஆட்டோ ஸ்டோர் உரிமையாளர் செந்தில், ஐயப்பா ஆட்டோ ஸ்டோர் உரிமையாளர் பாலசுப்பிரமணியன், ஆட்டோ ஸ்பேர் ஏஜென்சிஸ் மற்றும் ஆயில் ஏஜென்ஸிஸ், மேலூர் நண்பர்கள் இரண்டு சக்கர வாகன பழுது பார்ப்போர் நலச்சங்கத்தின் தலைவர் சி.ரமேஷ், செயலாளர் ஏ. விஜயகுமார், பொருளாளர் எஸ்.சுரேஷ், துணைத் தலைவர் டி. கருணாகரன், துணைச்செயலாளர் ஜி. ரகுபாலன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடகாடு ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தெருமுனை பிரச்சாரக்கூட்டம்



**ஒட்டன்சத்திரம், டிச. 23-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியம் வடகாடு ஊராட்சிக்குட்பட்ட பால்கடைபகுதியில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய செயலாளர் எஸ். ஆர். கே.பாலு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகளை எடுத்துக் கூறி துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு அவைத்தலைவர் சோமசுந்தரம், ஒன்றியதுணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், சிவபாக்கியம் ராமசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மணிபாரதி ,மாணவர் அணி அமைப்பாளர் சந்தோஷ், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## சிக்னிஃபை இந்தோ-நேபாள எல்லையோரமுள்ள 100 கிராமங்களுக்கு ஒளியூட்டுதல், பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துதல்

**சென்னை, டிச 23-**

பிரைட்டர் லிவ்விங் பெட்டர் வேல்டு என்ற தொலைநோக்கின் கீழ், ஒளியமைப்பு துறையின் உலக முன்னணி நிறுவனமான சிக்னிஃபை, தாரக் பவுண்டேஷன் உடன் இணைந்து, இந்தோ-நேபாள எல்லையோர 100 கிராமங்களில் எல்இடி தெருவிளக்குகளை மயமாக்கல் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த முன்முயற்சி, பாதுகாப்பான மற்றும் வலிமையான எல்லையோர சமூகங்களை உருவாக்க வேண்டும் என்ற இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் தொலைநோக்கு பார்வையின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. சுமார் 1700 கிலோமீட்டர் நீளமுள்ள இந்தியா–நேபாள எல்லைப் பகுதிகளில், போதிய தெருவிளக்குகள் இல்லாததால் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வந்தன. இந்த திட்டத்தின் மூலம், ஆற்றல் திறன் கொண்ட எல்இடி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பான மாலை நேரங்கள், உள்ளூர் வாழ்வாதார ஆதரவு மற்றும் சமூகப் பிணைப்புகள் வலுப்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமமும், மக்கள் நடமாட்டம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளின் அடிப்படையில் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.இது குறித்து சிக்னிஃபை கிரேட்டர் இந்தியாவின் சந்தைப்படுத்தல், வியூகம், அரசு விவகாரங்கள் மற்றும் சிஎஸ்ஆர் தலைவர் நிஹில் குப்தா கூறுகையில், ஹர்காவ்ன் ரோஷன் சிஎஸ்ஆர் முன்முயற்சியின் மூலம் நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக வலுப்படுத்தலுக்கு சிக்னிஃபை உறுதியாக உள்ளது என்றார். மேலும் தார்க் பவுண்டேஷனின் நிறுவன பங்குதாரர் மனோவிராஜ் சிங் கூறுகையில், எல்லையோர மக்களின் அன்றாட வாழ்க்கை தேவைகளுக்கு நேரடியாக பதிலளிக்கும் இந்த முயற்சி, ஒளியை ஒரு குறியீடாக அல்ல, பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் அளிக்கும் நடைமுறை தீர்வாக மாற்றியுள்ளது என்று கூறினார்.

# சென்னையில் ஆண்களில் அதிகரிக்கும் இனப்பெருக்கக் குறைபாடு

**சென்னை, டிச 23-**

நகரில் இனப்பெருக்க விகிதங்கள் தொடர்ந்து குறைந்து வருவது குறித்து அப்பல்லோ கருவுறுதல், நோவா ஐவிஎப் கருவுறுதல் மற்றும் தாய்மை மருத்துவமனைகள்ஆகிய மருத்துவமனைகளின் மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது குறித்து அப்போலோ கருவுறுதல், அண்ணா நகர், சென்னை மருத்துவமனையின் இனப்பெருக்க நிபுணர் டாக்டர் அப்துல் பாசித் கூறுகையில், எங்கள் கிளினிக்குகளுக்கு வருகை தரும் நோயாளிகளில் விந்தணு அளவுகோள்களில் தொடர்ந்து குறைவு காணப்படுகிறது. எங்கள் கிளினிக்கில் மட்டும் கடந்த ஒரு ஆண்டில் சுமார் 350-400 ஆண்களுக்கு இனப்பெருக்கக் குறைபாடு தொடர்பான பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன என்றார்.இந்த ஆண்களில் பெரும்பாலோர் 25-40 வயதுக்குள் உள்ள இனப்பெருக்க வயது குழுவைச் சேர்ந்தவர்கள் என மருத்துவர்கள் தெரிவித்தனர். இரு நிலைகளிலும் விந்தணு எண்ணிக்கை, இயக்கம் மற்றும் வடிவம் ஆகியவற்றில் குறைவு காணப்படுகிறது. இதற்கான காரணங்களாக அதிக வேலை நேரம், புகைபிடித்தல், உடல் பருமன், உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கை முறை, ஆரோக்கியமற்ற உணவு பழக்கம் மற்றும் குறிப்பாக மாநகரங்களில் அதிகரித்து வரும் மாசுபாடு ஆகியவை குறிப்பிடப்படுகின்றன

சென்னை ராஜா அண்ணாமலை புறத்தில் உள்ள நோவா ஐவிஎஃப் கருவுறுதல் மையம் மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் ஜே. கிருத்திகா தேவி கூறுகையில், இந்தியாவில் குறைந்தது ஆறு தம்பதிகளில் ஒருவருக்கு இனப்பெருக்கக் குறைபாடு பாதிப்பை ஏற்படுத்துகிறது. சென்னை போன்ற நகர்ப்புறங்களில் ஆண் சார்ந்த இனப்பெருக்கக் குறைபாடு கணிசமாக அதிகரித்து வருகிறது என்றார். மதர்ஹுட் மருத்துவமனைகள் சென்னை மருத்துவமனையின் டாக்டர் டி. மகேஷ்வரி கீழ்கண்ட வாழ்க்கைமுறை மாற்றங்களை பரிந்துரைத்துள்ளார். தினசரி உடற்பயிற்சி செய்யுங்கள், நடைப்பயிற்சி, ஜாக்கிங், யோகா மற்றும் நீட்டிப்பு பயிற்சிகள் உடல் பருமனை குறைத்து, ஹார்மோன் சமநிலையை மேம்படுத்தும். விந்தணு உற்பத்திக்கு தேவையான சிங்க், வைட்டமின் சி, செலினியம் போன்ற மைக்ரோ நியூட்ரியன்ட்களை உணவு அல்லது ஊட்டச்சத்து மாத்திரைகள் மூலம் பெறுங்கள். இந்த எளிய வாழ்க்கைமுறை மாற்றங்களின் மூலம் மொத்த உடல்நலம் மட்டுமல்லாது, விந்தணு அளவுகோள்களையும் மேம்படுத்த முடியும். நிபுணர்கள் மூலம் விந்தணு குறைபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து, சரியான சிகிச்சை பெறலாம்.

## விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் குகேஷ் பங்கேற்கும் ஏசியன் பெயிண்ட்ஸ்-ன் புதிய ‘அபெக்ஸ் அல்டிமா புரோடெக்’ விளம்பரம்

**சென்னை, டிச 23-**

ஏசியன் பெயிண்ட்ஸ் தனது புதிய பெயிண்ட் தயாரிப்பு அபெக்ஸ் அல்டிமா புரோடெக்-ஐ அறிமுகப்படுத்தி, தென்னிந்திய வீடுகளின் வெளிப்புறச் சுவர்களுக்கு மேம்பட்ட பாதுகாப்பை வழங்கும் கிராஃபீன் தொழில்நுட்பம் மூலம் புதிய தரநிலையை நிறுவியுள்ளது. இந்த பெயிண்ட், மழை, வெயில், ஈரப்பதம் மற்றும் தூசிக்கு எதிரான 12 வருட செயல் திறன் உத்தரவாதத்துடன், வீட்டிற்கு நீண்டகால பாதுகாப்பையும் மனநிம்மதியையும் வழங்குகிறது.விளம்பரத்தில் சதுரங்க ஜாம்பவான்கள் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் குகேஷ் டொம்மராஜு முன்னிறுத்தப்பட்டு, அறிவியல், வியூகம் மற்றும் கதைசொல்லல் மூலமாக கிராஃபீன் தொழில்நுட்பத்தின் பலன்கள் விளக்கப்படுகின்றன.

சதுரங்கத்தில் எதிராளியின் நகர்வுகளை முன்கூட்டியே கணிப்பது போல, அபெக்ஸ் அல்டிமா புரோடெக் தீவிர வானிலை மாற்றங்களுக்கு முன்னெச்சரிக்கை மற்றும் சிறந்த பாதுகாப்பை அளிக்கும் என்பதை விளம்பரம் வலியுறுத்துகிறது.இந்த பிரசாரம் ஏசியன் பெயிண்ட்ஸ் எம்.டி. மற்றும் சி.இ.ஓ அமித் சிங், ஓகிள்வி இந்தியா தலைமை வாடிக்கையாளர் அதிகாரி பி. ராமநாதன், மற்றும் படைப்பு குழுவினர் கிஷோர் மோகன்தாஸ், ஆர்.கார்த்திக், எஸ்.ஜனனி, கிருஷ்ண குமார் சிஜி ஆகியோர் இணைந்து உருவாக்கியதாகும். தயாரிப்பு நிறுவனம் கோகனட் ஃபிலிம்ஸ், இயக்குனர் ராஜேஷ் ராமசாமி, தயாரிப்பாளர்கள் துஷார் ராவத் மற்றும் மினோதி ஆஷர் ஆகியோர் இதில் பங்களித்துள்ளனர்.

# விருதுநகர் கலெக்டர் சுகபுத்ரா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**விருதுநகர், டிச. 23-**

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகபுத்ரா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இலவச வீட்டு மனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நல உதவித்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்தகுடிமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இம்மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள். மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்கள்.

பின்னர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மூன்று சக்கர சைக்கிள் 3 நபருக்கும், சக்கர நாற்காலி ஒரு நபருக்கும், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் 5 நபர்களுக்கும், பிரெய்லி வாட்சுகள் 3 நபர்களுக்கும், எல்போ கிரட்ச்ஸ்கள் 2 நபர்களுக்கும் என ஆக மொதம் 14 நபர்களுக்கு ரூ.61,900 மதிப்பிலான உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆனந்தி, தனித்துணை ஆட்சியர் காளிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிரதௌஸ் பாத்திமா, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முதுகுளத்தூரில் இருந்து பரமக்குடிக்கு புதிய பேருந்து இயக்கத்தை பேரூராட்சி சேர்மன் தொடங்கி வைத்தார்



**முதுகுளத்தூர், டிச. 23-**

முதுகுளத்தூர் இருந்து பரமக்குடிக்கு பழைய வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்கத்தை வனம் மற்றும் கதர் வாரியத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் பரிந்துரையின் பேரில் முதுகுளத்தூர் பேரூராட்சி சேர்மன் ஏ. ஷாஜஹான் துவக்கி வைத்தார்.

இதன் துவக்க விழா முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

புதிய பேருந்து இயக்க நிகழ்ச்சியில் தி.மு.க. ஒன்றிய பொறுப்பாளர்கள் கோவிந்தன் ஹரி முத்துராமலிங்கம் தொழிற் சங்க தலைவர் லிங்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வடமலையான் கீழத்தூவல் அழகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் மலபார் கோல்டு & டைமண்ட்ஸின் 33-வது புதிய ஷோரூம் சென்னை அடையாரில் திறப்பு



**சென்னை, டிச 23-**

மலபார் குழுமத்தின் முன்னோடி நிறுவனமான மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனம் சென்னை அடையாரில் தனது 33வது புதிய ஷோரூமை திறந்துள்ளது. இந்த ஷோரூமில் அதிகமான இடவசதி, புதிய மாடல்கள் மற்றும் டிசைன்களில் தங்கம், வைரம், மற்றும் வெள்ளி, நகைகளின் தொகுப்புகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இந்த புதிய ஷோரூமை மா.சுப்பிரமணியன் (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தமிழ்நாடு) திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் யாசர் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு மண்டல தலைவர்), சபீர் அலி (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு மண்டல வர்த்தக தலைவர்), அமீர் பாபு (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு வடக்கு மண்டல தலைவர்), நௌசாத் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு மேற்கு மண்டல தலைவர்), மற்றும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மேலாண்மை உறுப்பினர்கள் மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 14 நாடுகளில் 410-க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது, தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை, நாகர் கோயில், திருநெல்வேலி, சேலம், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், தர்மபுரி, வேலூர், திருச்சி, கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி, கரூர், செங்கல்பட்டு, கடலூர், ஒசூர், ஆகிய நகரங்களில் 33 கிளைகளை கொண்டுள்ளது. மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான மைன் பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட எரா மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான பிரீசியா நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான எத்தினிக் நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான டிவைன் குழந்தைகளுக்கான நகை தொகுப்பான ஸ்டார்லெட் ஆகியவை இந்த ஷோரூமில் இடம்பெற்றுள்ளன.

**மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி**

# மதுரையில் எல்.ஐ.சி. கிளை மேலாளர் கல்யாணி நம்பி மறைவுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி ஊழியர்கள் மரியாதை



மதுரை, டிச.23-

கடந்த புதன்கிழமை மதுரை எல்ஐசி நகர் கிளை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த கிளை மேலாளர் கல்யாணி நம்பி அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், திங்களன்று மதுரை நகர் கலை ஒன்றில் எல்ஐசி ஊழியர்கள் மெழுகுதிரி ஏந்தி புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில், உயிரிழந்த கல்யாணி நம்பி அவர்களின் உருவப்படத்திற்கு மலர் தூவி, மெழுகுதிரி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட எல்ஐசி ஊழியர்கள் கலந்து கொண்டு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தனர்.

அஞ்சலி நிகழ்ச்சியில் காப்பீட்டுக் கழக ஊழியர் சங்கம், எல்ஐசி அதிகாரிகள், வளர்ச்சி அதிகாரிகள், முகவர்கள், ஊழியர்கள், ஓய்வூதியர்கள், ஜிஐசி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும், முதல் நிலை அதிகாரிகள் சங்கம், தேசிய களப்பணியாளர் கூட்டமைப்பு, லியாபி முகவர் சங்கம், லிகாய் முகவர் சங்கம், அகில இந்திய பென்ஷனர் சங்கம், மதுரை மண்டல பொது இன்சூரன்ஸ் ஊழியர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதில் மூத்த நிலை கோட்ட மேலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டு, கல்யாணி நம்பி அவர்களின் பணிசேவை, அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தினர். அவரது மறைவு எல்ஐசி குடும்பத்திற்கும் இன்சூரன்ஸ் துறைக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு என அவர்கள் தெரிவித்தனர்.

# 7 இருக்கைகள் கொண்ட புதிய கார் 'கிராவிட்': இந்தியாவில் நிசான் விரைவில் அறிமுகம்

வேலூர், டிச 23-

இந்திய வாகனச் சந்தையில் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டும் வகையில், நிசான் நிறுவனம் தனது புதிய 7-இருக்கைகள் கொண்ட பி-எம்பிவி பிரிவில் 'கிராவிட்' என்ற பெயரில் புதிய காரை அடுத்த ஆண்டு துவக்கத்தில் அறிமுகம் செய்யவுள்ளது. இன்றைய கால இந்தியக் குடும்பங்களின் தேவைகளை முழுமையாக ஆய்வு செய்து இந்த கார் உருவாக்கப்பட்டுள்ளது. அதிக இடவசதி, மாற்றியமைக்கக் கூடிய இருக்கை வசதிகள் மற்றும் குறைந்த விலை என நடுத்தர குடும்பங்களுக்கு ஏற்ற ஒரு முழுமையான காராக இது இருக்கும் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. நிசான் மோட்டார் இந்தியா நிறுவனம் கடந்த 2024 ஜூலை மாதமே தனது எதிர்காலத் திட்டங்களை வெளியிட்டிருந்தது. அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள முக்கிய மாடல்கள் பின்வருமாறு: 7 இருக்கைகள் கொண்ட கிராவிட் கார் 2026-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அறிமுகம்; டெக்டன் அடுத்த ஆண்டின் மத்தியில் அறிமுகம்; 7 இருக்கை கொண்ட சி-எஸ்யூவி 2027-ம் ஆண்டின் துவக்கத்தில் அறிமுகம் என கூறியிருந்தது. இந்திய வாடிக்கையாளர்களுக்குப் புத்தம் புதிய மற்றும் நவீன ரகக் கார்களைத் தொடர்ந்து வழங்க நிசான் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த கிராவிட் அறிமுகம், அந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. கிராவிட் என்ற இந்தப் பெயர் 'கிராவிட்டி' என்ற சொல்லில் இருந்து ஈர்க்கப்பட்டது. இது ஒரு வாகனத்தின் சமநிலை, நிலையான தன்மை மற்றும் அனைவரையும் கவரும் ஆற்றலைக் குறிக்கிறது. குடும்பங்களுக்குத் தேவையான வசதி, பன்முகப் பயன்பாடு மற்றும் நவீன தொழில்நுட்பத் தொடர்பு ஆகியவற்றை உறுதி செய்யும் நிசானின் உயரிய நோக்கத்தை இந்தப் பெயர் பிரதிபலிக்கிறது. புதிய கிராவிட் கார், ஒரு குடும்பத்தின் பயண அனுபவத்தையே மாற்றப்போகிறது. இதன் உட்புறம் மிகவும் விசாலமாகவும், பொருட்களை வைப்பதற்கான இடவசதி இதில் மிகச் சிறந்த முறையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அம்சமும் மக்களின் தேவைக்கேற்ப மிக நுணுக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள 'அல்ட்ரா-மாடுலர்' இருக்கைகளை, பயணிகளின் எண்ணிக்கை அல்லது லக்கேஜ் அளவிற்கு ஏற்ப மிக எளிதாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம். இதனால் தினசரி அலுவலகப் பயணமாக இருந்தாலும் சரி, குடும்பத்தோடு செல்லும் நீண்ட தூரச் சுற்றுலாவாக இருந்தாலும் சரி, பயணம் மிகவும் இனிமையாக இருக்கும். அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அறிமுகமாகவுள்ளது என்று தெரிவித்தார்.

# சந்தை வளர்ச்சியுடன் கூடிய ஆயுள் காப்பீடு வழங்கும் 'மல்டிகேப் ஆப்பர்ச்சூனிட்டீஸ் பண்ட்': டாடா ஏஐஏ அறிமுகம்

கோவை, டிச.23-

பங்கு சந்தை சூழலுக்கு ஏற்ப டாடா ஏஐஏ லைப் இன்சூரன்ஸ் நிறுவனம் "டாடா ஏஐஏ மல்டிகேப் ஆப்பர்ச்சூனிட்டீஸ் பண்ட்" மற்றும் "டாடா ஏஐஏ மல்டிகேப் ஆப்பர்ச்சூனிட்டீஸ் பென்ஷன் பண்ட்" ஆகிய இரண்டு திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் துறை சார்ந்த மாற்றங்களால் இன்றைய பங்குச்சந்தை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படுகிறது. இத்தகைய சூழலில், முதலீட்டாளர்கள் ரிஸ்க் மற்றும் லாபம் இரண்டையும் சமன் செய்யும் உத்திகளைக் கையாள்வது அவசியமாக உள்ளது. பல்வேறு துறைகள், சொத்துகள் மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்களில் முதலீட்டைப் பிரித்து வைப்பதன் மூலம், முதலீட்டாளர்கள் ஒரே ஒரு சந்தைப் பிரிவை மட்டும் நம்பியிருப்பதைத் தவிர்ப்பது என்பது நீண்ட கால அடிப்படையில் செல்வத்தை உருவாக்க உதவும். இந்தியாவின் வளர்ச்சி இன்று அனைத்துத் துறைகளிலும் விரிவடைந்துள்ளது. பாரம்பரியத் தொழில்கள் முதல் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் வரை, பெரிய நிறுவனங்கள் முதல் நம்பிக்கைக்குரிய நடுத்தர மற்றும் சிறிய நிறுவனங்கள் வரை அனைத்தும் இதில் அடங்கும். ஒரு 'மல்டிகேப்' உத்தியைப் பயன்படுத்துவதன் மூலம், முதலீட்டாளர்கள் வளர்ச்சியின் பலனைப் பெறலாம். அதே நேரத்தில், பல்வேறு சந்தைப் பிரிவுகளில் முதலீடு செய்வதால், சந்தை ஏற்ற இறக்கங்களின் பாதிப்புகளையும் குறைக்க முடியும். இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவும் வகையில், டாடா ஏஐஏ லைப் இன்சூரன்ஸ் நிறுவனம் "டாடா ஏஐஏ மல்டிகேப் ஆப்பர்ச்சூனிட்டீஸ் பண்ட்" மற்றும் "டாடா ஏஐஏ மல்டிகேப் ஆப்பர்ச்சூனிட்டீஸ் பென்ஷன் பண்ட்" ஆகியவற்றை அறிமுகப்படுத்துகிறது. இவை 'நிப்டி 500' குறியீட்டை அடிப்படையாகக் கொண்டவை. இதன் மூலம் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நிறுவனங்களில் உங்களின் தொகை முதலீடு செய்யப்பட உள்ளது. இந்த இரண்டு பண்டுகளும் புதிய வெளியீட்டு காலமான வரும் 24-ந்தேதி முதல் இம்மாதம் 31-ந்தேதிவரை சந்தாவுக்குக் கிடைக்கும். இக்காலத்தில் ஒரு யூனிட்டின் விலை 10 ரூபாய் ஆகும். முதலீட்டாளர்கள் டாடா ஏஐஏ-வின் யூலிப் திட்டங்கள் மூலம் இவற்றில் முதலீடு செய்யலாம். இதன் மூலம் சந்தை சார்ந்த வளர்ச்சியோடு, ஆயுள் காப்பீட்டு பாதுகாப்பின் பலனும் கிடைக்கும். இந்த 'மல்டிகேப் ஆப்பர்ச்சூனிட்டீஸ் ஃபண்ட்' ஒரு சமச்சீரான அணுகுமுறையை வழங்குகிறது. இது பெரிய நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையையும், நடுத்தர மற்றும் சிறிய நிறுவனங்களின் வேகமான வளர்ச்சித் திறனையும் இணைக்கிறது. இந்த நெகிழ்வான முதலீட்டு முறை, இந்தியாவின் பல்வேறு வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், அதே சமயம் ரிஸ்க்கை நிர்வகிக்கவும் உதவுகிறது. யூலிப் திட்டங்கள் மூலம் இவற்றை வழங்குவது, நுகர்வோர் ஒரே திட்டத்தில் செல்வத்தை பெருக்கவும், தங்கள் குடும்பத்திற்கான பாதுகாப்பை உறுதி செய்யவும் டாடா ஏஐஏ வழிவகை செய்கிறது. மேலும், தற்போதைய வரி சட்டங்களின்படி இதற்கு வரிச் சலுகைகளும் கிடைக்கலாம்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# பரமக்குடியில் தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



பரமக்குடி, டிச. 23-

பரமக்குடி ஓட்டப்பாலம் அருகில் உள்ள சி.எஸ்.ஐ. தேவாலயத்தில் கிருஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் பரமக்குடி மாவட்ட கூடுதல் நீதிமன்ற அரசு வழக்கறிஞரும் சி.எஸ்.ஐ. தேவாலயத்தின் செயலாளருமான ஜான் ராஜதுரை ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. இந்த விழாவிற்கு தி.மு.க. மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். பரமக்குடி எம்.எல்.ஏ. முருகேசன், நகர்மன்றத் தலைவர் சேது கருணாநிதி, முன்னாள் அமைச்சர் சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வக்கீல் கருணாநிதி வரவேற்றார். போதகர் விஜயகுமார், உதவி போதகர் ஜேசுதாஸ் ஆகியோர் திருப்பலி நடத்தினர். விழாவில் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு புத்தாடைகள், இனிப்புகள், உணவுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர்கள் ரவிச்சந்திர ராமவன்னி, வடக்கு நகர் செயலாளர் ஜீவரத்தினம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# செந்துறையில் இலவச மருத்துவ முகாம்



நத்தம், டிச. 23-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் நாகசிவா சிட்பண்ட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு இண்டர்நேஷனல் மனித உரிமைகள் கழகம் அம்பாசிடர்ஸ் அமைப்பு சார்பில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. முகாமை நாகசிவா சிட்பண்ட் இயக்குநர் நாகராஜ் பெரியசாமி தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சவரிமுத்து, கம்யூனிஸ்ட் நிர்வாகி ஸ்டாலின், நாகசிவா பங்குதாரர் குப்புச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் துவரங்குறிச்சி சுகம் மருத்துவமனை மருத்துவர்கள் கலந்து கொண்டு சர்க்கரை, பொது மருத்துவம், சிறுநீர் பரிசோதனை, கர்ப்பிணி பெண்களுக்கான ஸ்கேன் பரிசோதனை, இ.சி.ஜி. பரிசோதனை, போன்றவற்றிற்கு மருத்துவ குழுவினர் மூலம் பரிசோதனை செய்து சிகிச்சைகள் அளித்து மருந்து மாத்திரைகள் வழங்கினர். இந்த முகாமில் செந்துறை சுற்று வட்டாரத்தை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# எஸ்.ஆர்.எம் குளோபல் மருத்துவமனையில் தமிழ்நாட்டின் முதல் டாக்டிஃபிளக்ஸ் அகற்றல் செயல்முறை சிகிச்சை

சென்னை, டிச 23-

சீரற்ற இதயத் துடிப்பு பிரச்சனையால் பாதிக்கப்பட்டிருந்த செங்கல்பட்டைச் சேர்ந்த 80 வயது முதியவருக்கு எஸ்.ஆர்.எம் குளோபல் மருத்துவமனை மருத்துவர்கள் வெற்றிகர சிகிச்சையின் மூலம் புதிய வாழ்க்கையை தந்திருக்கின்றனர். தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக, டாக்டிஃபிளக்ஸ் எனும் நவீன கத்திட்டரைப் பயன்படுத்தி ரேடியோ ஃப்ரீக்வென்சி அப்லேஷன் (நுட்பமான மின்னலைகளின் அலைவெண் அகற்றல்) சிகிச்சை இந்த நோயாளிக்கு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வளையும் தன்மை மற்றும் தொடு உணர்திறன் கொண்ட உலகின் முதல் கத்தீட்டரான டாக்டிஃபிளக்ஸ், ரேடியோ அலைவரிசை ஆற்றலைச் சீராகவும் துல்லியமாகவும் செலுத்துகிறது. வழக்கமான விறைப்பான கத்திட்டர்கள் இதயத் துடிப்பின் போது நழுவக்கூடும். ஆனால் டாக்டிஃபிளக்ஸ் கருவி இதய அசைவோடு வளைந்து கொடுத்து நிலையான சிகிச்சையை உறுதி செய்கிறது. இச்செயல்முறையை எஸ்ஆர்எம் குளோபல் மருத்துவமனையின் இதய அறிவியல் சிகிச்சைப் பிரிவின் இயக்குனரும், இதய சிகிச்சை நிபுணருமான டாக்டர் டி.ஆர். முரளிதரன் தலைமையிலான இதயவியல் இடையீட்டு சிகிச்சை நிபுணர்கள் குழு வெற்றிகரமாக மேற்கொண்டது.

இது குறித்து எஸ்.ஆர்.எம் குளோபல் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பி. சத்யநாராயணன் கூறுகையில், இதயத் துடிப்பு கோளாறுகளைச் சரிசெய்யும் அப்லேஷன் சிகிச்சையில் துல்லியம் மிக முக்கியம். டாக்டிஃபிளக்ஸ் கருவியின் வளையக்கூடிய முனை மற்றும் நிகழ்நேர அழுத்தக் கண்காணிப்பு வசதி ஆகியவை எமது திறன்மிக்க மருத்துவர்கள் இதய நோயாளிகளுக்கு பாதுகாப்பான சிகிச்சையை அளிக்க உதவுகிறது என்றார். மேலும் டாக்டர் முரளீதரன் கூறுகையில், 80 வயதான இந்த முதிய நோயாளி நெஞ்சு படபடப்பு மற்றும் மூச்சுத்திணறலோடு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில் அவருக்கு திரும்பத்திரும்ப நிகழும் இதய மேலறை குறுநடுக்கம் மற்றும் கீழறையில் அடிக்கடி முதிர்ச்சியடையாத சுருக்கத் துடிப்புகள் இருந்தது எங்களால் கண்டறியப்பட்டது. 3டி மேப்பிங் மற்றும் டாக்டிஃபிளக்ஸ் உதவியுடன் அந்த இயல்புக்கு மாறான சமிக்ஞைகளைத் துல்லியமாகக் கண்டறிந்து இப்பிரச்சனைக்கு நாங்கள் தீர்வு கண்டோம். இதய செயல்பாடு இயல்பு நிலைக்கு திரும்பிய நிலையில் சிகிச்சைக்குப் பின் 48 மணி நேரத்தில் நோயாளி நலமுடன் வீடு திரும்பினார் என்று கூறினார்.

# திருமங்கலம் இலக்கியப் பேரவை சார்பில் ஆசிரியர்கள், மாணவ - மாணவிகளுக்கு பாராட்டு விழா: முன்னாள் எம்.பி. பங்கேற்பு



திருமங்கலம், டிச. 23-

மதுரை மாவட்டம் திருமங்கலம் இலக்கியப் பேரவையின் 337-வதுகூட்டம் ஜவஹர் நகரிலுள்ள லிங்கா மெட்ரிகுலேசன் பள்ளி வளாகத்தில் நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பேரவைத் தலைவர் பெ.பூலோகசுந்தரவிசயன் தலைமை வகித்தார். புலவர் வை.சங்கரலிங்கம் முன்னிலை வகித்தார். பேரவை செயலாளர் சங்கரன் வரவேற்று பேசினார். குறளும் பொருளும் என்ற தலைப்பில் பேரவை துணைச் செயலாளர் மா.ஜெயபால கிருஷ்ணன், அறிவோம் வரலாறு என்ற தலைப்பில் பேரவையின் பொருளாளர் அ.தமிழ்ச்செல்வன் பேசினர்.

இதனை தொடர்ந்து கோட்டைப்பட்டி பராசக்தி கல்வி குழும நிர்வாகி மு.ஜெகதீசன், முதுகலை தாவரவியல் ஆசிரியர் (ப.நி) அ.இராமநாதன், தங்களாச்சேரி பள்ளி தலைமை ஆசிரியர் அ.இளங்குமரன், இறையன்பு அறக்கட்டளை பொருளாளர் இரா.சக்கையா, மைக்குடி பள்ளி ஆசிரியை மு.தாமரைச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதையடுத்து இலட்சிய ஆசிரியை விருது பெற்ற பி.கே.என் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதுகலை விலங்கியல் ஆசிரியை பி.மெர்லின், செ.மீனாட்சிபுரம் பள்ளி தலைமை ஆசிரியர் (பொ) சு.பொ.பூபதி சரவணக்குமார், து.புதுார் பள்ளி தலைமை ஆசிரியர் (ப.நி) அ.செல்வராஜ் ஆகியோருக்கும், 2024-2025 கல்வ ஆண்டில் 10,12-ம் வகுப்பு பொது தேர்வில் தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கும் சிறப்பாளராக கலந்து கொண்ட முன்னாள் எம்.பி என்.எஸ்.வி.சித்தன் பொன்னாடை அணிவித்து பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து எனது வெளிநாட்டு பயண அனுபவங்கள் என்ற தலைப்பில் என்ற தலைப்பில் இலக்கிய பேரவை செயற்குழு உறுப்பினர் இலக்கியச்சுடர் குரு. ஜெயச்சந்திரன் சிறப்புரை யாற்றினார். இதில் சமூக மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பார்த்த சாரதி, இருளப்பன், கதிரேசன், ஆதிமூலம், பிரசன்னா முருகன், பாண்டிச் செல்வி, முனீஸ்வரி, மனுவேல், காசிம், காளி முத்து, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் நிறைவில் செயற்குழு உறுப்பினர் தி.கண்ணன் நன்றி கூறினார்.

# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ காப்பீட்டு முகாம்



ராஜபாளையத்தில், டிச. 23-

ஒருங்கிணைந்த பள்ளி கல்வி இயக்ககம் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ காப்பீட்டு முகாம் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் வைத்து நடைபெற்றது. இம்முகாமில் மனநல மருத்துவர், காது மூக்கு தொண்டை நிபுணர், கண் மருத்துவர் மற்றும் பொதுநல மருத்துவர்கள் இணைந்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ காப்பீடு செய்வதற்கான பரிசோதனைகள் செய்து பரிந்துரைகள் வழங்கினார்கள்.

முகாமில் தனித்துவ அடையாள அட்டை, மற்றும் ரயில் பேருந்துகளில் பயணம் செய்வதற்கான பயண அட்டைகளும் வழங்கப்பட்டன. கல்வி திட்டத்தின் மாவட்ட ஒன்றிணைப்பாளர் குமார், ராஜபாளையம் வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொறுப்பு) மாரியப்பன், வட்டார வளமைய ஒருங்கிணைப்பாளர் குமரகுருபரன், ஆசிரியர் பயிற்றுனர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் இயன்முறை மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**ஓ.மு.எண் : 8897/2025/அ.3**

T.குழந்தைவேல்,
S/o.K.தங்கராஜ்,
டோர் நம்பர். 23,
பிளாட் எண் : 53,
K K நகர் கிழக்கு 4 வதுதெரு,
மதுரை - 20
..... மனுதாரர்
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள் மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதார் T.குழந்தைவேல் என்பவரின் தாயார் T.கனகாம்புஜம் 11.01.2000-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை கொட்டாம்பட்டி கிராம அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

T.குழந்தைவேல்
மனுதாரர்

**ந.க.எண்.6933/2025**
**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை**
**அறிவிப்பு**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், பள்ளிதம்மம் கிராமம், பள்ளிதம்மம் பஞ்சாயத்து, தற்சமயம்: க.எண்.167 பாப்பா நகர், விளார் ரோடு, தஞ்சாவூர் என்ற முகவரியில் வசித்து வரும் லூர்துசெல்வி என்பவரின் தாயார் சூசைமேரி க/பெ. சேசுராஜ் என்பவர் கடந்த 10.12.2019-ம் தேதியில் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம் , பள்ளிதம்மம் பஞ்சாயத்து, பள்ளிதம்மம் கிராமம், என்ற முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்து பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

லூர்துசெல்வி
மனுதார்

**ந.க.எண்.1681/2025**
**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை**
**அறிவிப்பு**

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம்,2/27 ஆ.கருங்குளம் கிராமம், ஆ. கருங்குளம் பஞ்சாயத்து என்ற முகவரியில் வசித்து வரும் சடையப்பன் என்பவரின் தாத்தா சுப்பையா அம்பலம் த/பெ. வெள்ளைச்சாமி என்பவர் கடந்த 20.08.1987-ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சடையப்பன்
மனுதார்

**மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம் இராமநாதபுரம்.**
**G.W.O.P.95/2025**

1. மைனர் லசிஹாதேவி (12/2025)
2. மைனர் சாய்கவின் (10/2025)

த/பெ . லேட். S.பாலாஜி
No.131, இளங்கோவடிகள் தெரு,
இராமநாதபுரம்.
B. லிங்கலெட்சுமி
-மனுதாரர்
-எதிர்-
S.ராஜேஸ்கண்ணா,
த/பெ. லேட், P.A. சண்முகம்,
131, இளங்கோவடிகள் தெரு, இராமநாதபுரம் டவுன்,
இராமநாதபுரம் மாவட்டம்.
-எதிர்மனுதார்

அறிவிப்பு

இதனடியில் கண்ட சொத்தில் மேற்படி மைனர்களுக்கு பாத்தியமான 2/3 பங்கு சொத்தை மேற்படி மைனர்களின் தாயாரும் காப்பாளருமான மேற்படி மனுதார் B. லிங்கலெட்சுமி என்பவர் மைனர்களின் காப்பாளர் என்ற முறையில் விற்பனை செய்யவும், அதற்கான கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கவும் அனுமதி கோரி மாண்புமிகு நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில் யாருக்கும் ஆட்சேபனை இருந்தால் 02.01.2026-ம் தேதி காலை 10.30 மணிக்கு மாண்புமிகு நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது அட்வகேட் மூலமோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் என்றும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை எனக்கண்டு உத்தரவு செய்யப்படும் என்றும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

சொத்து விபரம்:

இராமநாதபுரம் டவுன், இளங்கோவடிகள் தெருவில் உள்ள பழைய கதவு எண்.24டி4, புதிய கதவு எண்.131, 133-ல் கண்ட வீடும், அதை சேர்ந்த 1380 சதுரடி மனைநிலமும் உள்ளிட்ட R.S. மடை குருப், G.R. சர்வே நம்பர்.313, 314/2-ன் பகுதி. இராமநாதபுரம் நகரம், வார்டு F, பிளாக் 3, T.S.No:48/1A2- க்கு 0.0113.0 சதுர மீட்டரும், T.S.No:86/14- க்கு 0.0110.0 சதுர மீட்டரும் அளவுள்ளது.

K.நாகராஜன்,B.Sc.B.L.,
N.சுந்தர்கிருஷ்ணா,B.A.M.L.,
அட்வகேட்ஸ், இராமநாதபுரம்.

**மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்**
**G.W.O.P.No: 96/2025**

மைனர் ஆயிஷா பாஹிமா
(பிறந்த நாள் 02.11.2020)
(Minor.AYESHA FAHIMA)
த/பெ.அஹமது காசீம்
நம்பர்.20-5, மாதிஹூர் ரசூல் சாலை,
கீழக்கரை.
- மைனர்
மரியம் பாத்திமா (MARIYAM FATHIMA)
- மனுதார்
- எதிர் -
அஹமது காசீம் (AHAMED CAASIM)
த/பெ.திரு.ஹபீப் ராஹிக்,
3/92C, புதுத்தெரு, கீழக்கரை டவுன்,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
....எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரான மரியம் பாத்திமாவின் Custody- ல் இருந்துவரும் அவரது மகளான மைனர்.ஆயிஷா பாஹிமாவிற்கு மேற்படி மனுதாரரான மரியம் பாத்திமாவை காப்பாளராக நியமனம் செய்யுமாறு பரிகாரம் கோரி மனுதார் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில் யாருக்கும் ஆட்சேபனை இருந்தால் 05.01.2026-ம் தேதி காலை 10.30 மணிக்கு மாண்புமிகு நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது அட்வகேட் மூலமோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என்றும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை எனக்கண்டு உத்தரவு செய்யப்படும் என்றும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

K.நாகராஜன்,B.Sc.B.L.,
N.சுந்தர்கிருஷ்ணா,B.A.M.L.,
அட்வகேட்ஸ், இராமநாதபுரம்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.**
**ந. க. எண்.10316/2025/ஆ6**
**இ.ப. வ.எண்.275/2025/ஆ6**

பெருமாள் , த/பெ.லெட்சுமணன்,
கட்டபுலிபட்டி, முளையூர் கிராமம்,
நத்தம் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
... மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் தாத்தா கட்டபிச்சன் கடந்த 04.03.1982 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.**
**ந. க. எண்.8753/2025/ஆ6**
**இ.ப. வ.எண்.286/2025/ஆ6**

மூக்கன், த/பெ. சிக்கணகவுண்டர்,
5/86, கவுண்டர் தெரு,
அஞ்சுகுளிப்பட்டி கிராமம்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
... மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் தந்தை சிக்கணகவுண்டர் கடந்த 06.06.2003 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

**கூடுதல் சார்பு நீதிமன்றம், திண்டுக்கல்.**
**O.S.No.572/2025**

கனரா வங்கி
அதன் மேலாளர்
SPL Microfinance கிளை
.... வாதி
/எதிர்/
1. வளர்பிறை WJLG
அதன் தலைவர்
H. அனிஷா பாத்திமா
2. R. ஜசீனா (செயலாளர்)
3. T. அஸ்ரப் நிஷா
4. M. ராசாத்தி
5. K. சபிய பேகம்
6. S. சையது ராபியாத் பசரியா
..... பிரதிவாதிகள்

வாதி தரப்பு அறிவிப்பு

மேற்படி நிர் அசல் வழக்கில் வாதி வங்கி தரப்பில் தங்கள் ஆறு நபர்கள் மீது ஷையாருடைய கடன் தொகை வரப்பெற வேண்டி வழக்கு தாக்கல் செய்து 19.01.2026-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

V.S. Gandhimathinathan B.A.,B.L.,
Advocate, Dindigul.

**கூடுதல் சார்பு நீதிமன்றம், திண்டுக்கல்.**
**O.S.No.476/2025**

கனரா வங்கி
அதன் மேலாளர்
SPL Microfinance கிளை
.... வாதி
/எதிர்/
1. ஓம் சக்தி செஸ்
மகளிர் சுய உதவி குழு
அதன் செயலாளர் B. சாந்தி - D2
2. M. விஜய கலா D3
3. K. முருகேஸ்வரி - D4
4. P. லட்சுமி - D6
..... பிரதிவாதிகள்

வாதி தரப்பு அறிவிப்பு

மேற்படி நிர் அசல் வழக்கில் வாதி வங்கி தரப்பில் தங்கள் நால்வர் மீது ஷையாருடைய கடன் தொகை வரப்பெற வேண்டி வழக்கு தாக்கல் செய்து 19.01.2026-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

V.S. Gandhimathinathan
B.A.,B.L.,
Advocate,Dindigul.

**கூடுதல் சார்பு நீதிமன்றம் திண்டுக்கல்**
**O.S.No.218/2024**

கனரா வங்கி
அதன் மேலாளர்
மெயின் கிளை
..... வாதி
/எதிர்/
1. G. கிரண் பிரியங்கா
2. S. குணசேகர்
..... பிரதிவாதிகள்

வாதி தரப்பு அறிவிப்பு

மேற்படி நிர் அசல் வழக்கில் வாதி வங்கி தரப்பில் தங்கள் இருவர் மீது ஷையாருடைய கடன் தொகை வரப்பெற வேண்டி வழக்கு தாக்கல் செய்து 23-01-2026-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

V.S. Gandhimathinathan
B.A.,B.L.,
Advocate, Dindigul.

**முதன்மை சார்பு நீதிமன்றம் திண்டுக்கல்**
**O.S.No.221/2024**

கனரா வங்கி
அதன் மேலாளர்
மெயின் கிளை
..... வாதி
/எதிர்/
1. R. இளங்கோ
2. R. ஜெயலெட்சுமி
...... பிரதிவாதிகள்

வாதி தரப்பு அறிவிப்பு

மேற்படி நிர் அசல் வழக்கில் வாதி வங்கி தரப்பில் தங்கள் இருவர் மீது ஷையாருடைய கடன் தொகை வரப்பெற வேண்டி வழக்கு தாக்கல் செய்து 02-01-2026-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

V.S. Gandhimathinathan
B.A.,B.L
Advocate,Dindigul.

